MCOP.No.31/2015 Date : 28.11.2019

சாட்சி இன்று மீண்டும் வரவழைக்கப்பட்டு, சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு, குறுக்கு விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டார்.

2 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் கு.வி:

நான் ஓட்டிச் சென்ற இருசக்கர வாகனம் என் மைத்துனர் கிருஷ்ணசாமிக்கு பாத்தியப்பட்டது. எனக்கு விபத்தால் ஏற்பட்ட காயங்கள் குணமாகிவிட்டதா என்றால் குணமாகிவிட்டது. ஆனால் முன்பு போல் செயல்படவில்லை. விபத்து சமயத்தில் எனக்கு இருசக்கர வாகனம் ஓட்டுவதற்கு ஓட்டுனர் உரிமம் இல்லை. வழக்கு விபத்து சம்மந்தமாக திருவேங்கடம் காவல் நிலையத்தில் நான் தான் புகார் கொடுத்தேன். அந்த புகாரில் நான் டி.என்.76 டபுள்யூ 8742 என்ற எண்ணுடைய வாகனம், நான் ஓட்டிச் சென்ற வாகனத்தின் மீது மோதியது என்றும், விபத்திற்கு அந்த வாகனத்தின் கவனக்குறைவு தான் என்றும் சொல்லியுள்,ளேன் என்றால் சரிதான். அந்த வாகனத்தின் ஓட்டுனர் மீது தான் முதல் தகவல் அறிக்கையும், குற்ற இறுதி அறிக்கையும் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கில் அசல் மனு தாக்கல் செய்யப்படும்பொழுதே விபரங்கள் எல்லாம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள மனு பாரா 3ல் சம்பவத்தன்று நான் சிக்னல் செய்யாமல் சடன்பிரேக் போட்டதால் தான் விபத்து நடந்தது என்றும், நான் அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் சிக்னல் செய்து, ஹாரன் அடித்தும், சாலை விதிகளை மதித்தும் கடை பிடித்து மெதுவாக வாகனத்தை ஓட்டியிருந்தால் விபத்து நடந்திருக்காது என்றும் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். விபத்தானது 3 ஆம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவால் தான் ஏற்பட்டது என்றாலும், அந்த வாகனத்தின் ஓட்டுனரும், காப்பீட்டு கழகமும் தான் எனக்கு நஷ்ட ஈடு தர கடமைப்பட்டவர்கள் என்றாலும் சரியல்ல. என்னுடைய வியாபாரம் மற்றும் வருமானத்தைக் காட்டுவதற்கு நான் ஆவணம் எதனையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. நான் கோரியுள்ள இழப்பீடு தொகை அதிகமானது என்றாலும், அது 2 ஆம் எதிர்மனுதாரரைப் பொறுத்து தள்ளுபடிக்குரியது என்றாலும் சரியல்ல.

ம.வி: இல்லை.